# கட்டாய பாடசாலையின் ஆரம்பதரம் மற்றும் மத்தியதரநிலை 1 குறித்து மதிப்பீடு செய்தல்

Erziehungsdirektion des Kantons Bern

கட்டாய பாடசாலையின் ஆரம்பதரம் மற்றும் மத்தியதரநிலை 1 ஐ மதிப்பீடு செய்தது குறித்து பெற்றோர் மற்றும் வளர்ப்பிற்குப் பொறுப்பானவர்களுக்கான தகவல்கள்

பாலர்பாடசாலை, Basisstufe மற்றும் Cycle élémentaire என்பவைகளுக்கான தகவல்களை பேர்ண் மாநில கல்வித் திணைக்கள இணையத்தளத்தில் நீங்கள் காணலாம்: www.erz.be.ch

உள்ளடக்கம்


திறமையின் அடிப்படையிலான மதிப்பீடு . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 4

மாணவிகள்- மற்றும் மாணவர்களது மதிப்பீடு என்பது... . . . . . . . . . . . 4

மாணவிகள்- மற்றும் மாணவர்கள் மதிப்பீட்டின் வித்தியாசமான செயற்பாடுகள் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 5

பாடசாலை எதிர்காலப் பாதையை முடிவுசெய்தல் . . . . . . . . . . . . . . . . 6

ஆரம்பதரநிலையிலிருந்து மத்தியதரநிலை 1 க்கு உயர்ந்து செல்லும் நடைமுறை. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 7

இணைப்பு:
- இணைப்பு 1: மதிப்பெண்கள் பின்வரும் அர்த்தமுடையவை. . . . . . 9
- இணைப்பு 2: தரங்களின்படியான மதிப்பீட்டு வடிவம் . . . . . . . . . . . 10


**Impressum**


வெளியீடு
Erziehungsdirektion des Kantons Bern



தொடர்பு/விபரங்கள்
Erziehungsdirektion des Kantons Bern
Sulgeneckstrasse 70, 3005 Bern
031 633 85 11
akvb@erz.be.ch



2. Auflage Februar 2018
#826381v1

அன்பான பெற்றோரே

இந்தத் தகவல் படிவம் மதிப்பீடு குறித்த மற்றும் உங்கள் பிள்ளையின் பாடசாலை எதிர்காலப்பாதையை முடிவுசெய்வது குறித்த தகவல்களை உங்களுக்குத் தருகின்றது. தற்சமயம் உங்களுக்கு மேலதிக தகவல்கள் தேவைப்பட்டால், எமது இணையத்தளத்தைப் பார்வையிடுங்கள் www.erz.be.ch அல்லது வகுப்பாசிரியரை அல்லது பாடசாலை அதிபரைத் தொடர்புகொள்ளுங்கள்.

நீங்கள் பேர்ண் மாநில கல்வித் திணைக்கள இணையத்தளத்தில் www.erz.be.ch இந்தத் தகவல் கையேட்டின் மொழிபெயர்ப்புக்களைப் பல மொழிகளில் காணலாம்.

கல்வித் திணைக்களம்

## திறமையின் அடிப்படையிலான மதிப்பீடு

அனைத்திலும் முதன்மையாக மதிப்பீடு ஊக்கம் கொடுப்பதற்கு உதவுவதுடன் உங்கள் பிள்ளை தான் சொந்தமாகக் கற்பதற்கு உதவுவதை அனுபவித்துக் கொள்ளும். ஆசிரியர்களின் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு Lehrplan 21 திறமைகளின் அடிப்படையிலேயே அமைந்திருக்கும்.

## மாணவிகள்- மற்றும் மாணவர்களது மதிப்பீடு என்பது...

... ஊக்கத்தை அடிப்படையாகக் கொண்டது
மதிப்பீசெய்வது மற்றும் மீளத்தொடர்பு கொள்வது பிள்ளைகள் மற்றும் இளையோர் கற்க மற்றும் வளர்ச்சிபெற ஊக்கமளிக்கிறது அத்துடன் அவர்கள் எவ்வாறு அடுத்த கற்கும் படிக்குப் செல்லப்போகின்றார்கள் என்பதையும் எடுத்துக் காட்டுகின்றது.

... பாடத்திற்குப் பொருந்துகின்றது
ஒவ்வொரு மதிப்பீட்டின் அடிப்படையும் பாடவேளையில் கற்கும் சந்தர்ப்பம் போன்றது.

... வெளிப்படையானது
மதிப்பீடு பெற்றோருக்கு புரிந்துகொள்ளக்கூடிய அளவில் மற்றும் கற்கும் படிநிலை குறித்து வித்தியாசப்படுத்திக் காட்டுவதுடன் உங்களது மகள் அல்லது மகனின் விருத்தி குறித்தும் தகவல்களை வழங்குகின்றது.

... முழுமையானது
மதிப்பீட்டில் துறைசார் அத்துடன் அதிதுறைசார் திறமைகளும் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

துறைசார் திறமைகளில் பல்வேறு பாடங்களில் (டொச், கணிதம், இசை போன்றவை) எடுத்துக்கொள்ளப்படுகின்றன. அதிதுறைசார் திறமைகளில் பாடங்களிலும் மேலான விடயங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன, உதாரணமாக தனித்துச் செயற்படுவது அல்லது குழுவாகச் செயற்படுவது போன்றவை. பாடங்களின்போது துறைசார் மற்றும் அதிதுறைசார் திறமைகள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்திருக்கும்.

## மாணவிகள்- மற்றும் மாணவர்களது மதிப்பீட்டின் வித்தியாசமான செயற்பாடுகள்

### கற்கும் செயல்முறைக்கான மதிப்பீடு மற்றும் சேர்ந்து உதவுதல்

பாடங்களின் போதான முக்கிய செயற்பாடு என்னவென்றால், உங்கள் பிள்ளையின் கற்கும் செயல்முறைக்கு வெற்றிகரமாக உதவுவதாகும். இதற்காக மாணவிகளும் மாணவர்களும் அவர்களது ஆசிரியர்களால் ஒழுங்காகவும், தெரிவுசெய்யப்பட்ட பாடவிதானங்களிலும் கண்காணிக்கப்படுவார்கள். இந்தக் கண்காணிப்பின் முடிவுகள் ஆசிரியர்களுக்கு தமது பாடத்தை இதற்கேற்வாறு நடத்தவும் அத்துடன் கலந்துரையாடலின்போது தெளிவான குறிப்புகள் மற்றும் விபரங்களைக் கொடுக்கவும் உதவும்.

### கற்கும் தரத்தை மதிப்பிடுவது

நீண்ட பாடக் காலத்தின் பின்னர் ஆசிரியர்கள் கைவேலைகள், கற்கும் பரிசோதனைகள் அத்துடன் கற்கும் செயல்முறைகளை வைத்து, மாணவிகள் மற்றும் மாணவர்கள் பாடங்களைக் கற்கும் குறிக்கோளை அடைந்துள்ளார்களா என்பதை மதிப்பிடுவார்கள்.

கற்கும் குறிக்கோள் மற்றும் பாடவிதானங்கள் குறித்து மாணவிகள் மற்றும் மாணவர்களுக்கு பாடக்காலம் ஆரம்பிக்கும்போது அறியத்தரப்படும்.

### சொந்தமாக மதிப்பீடு செய்தல்

சொந்தமாக மதிப்பீடு செய்தல் எனும்போது, பாடசாலை வருடக் காலத்தில் மாணவிகள் மற்றும் மாணவர்கள் தமது பாடங்கள் குறித்தும் மற்றும் பாடங்களுக்கு மேலான தமது திறமைகள் குறித்தும் தாமாகவே மதிப்பீடு செய்து கொள்வார்கள். இதன்போது அவர்கள் தாம் கற்பது குறித்து நினைத்துக் கொள்வதுடன், இதனூடக தாம் கற்கும் நடைமுறை குறித்து பொறுப்பேற்றுக் கொள்கின்றார்கள். சொந்தமாக மதிப்பீடு செய்தல் ஒவ்வொரு பாடத்திற்கும் கற்கும் நிலைமைகளைப் பொறுத்து இடம்பெறும்.

### பெற்றோர் கலந்துரையாடல்

இது பாடசாலை மற்றும் பெற்றோருக்கு இடையே நம்பிக்கையை வளர்ப்பதற்கும் சேர்ந்து செயற்படுவதற்கும் ஒரு முக்கிய பங்கு வகிப்பதுடன், வருடத்தில் ஒருமுறை இடம்பெறும். பெற்றோர் கலந்துரையாடல் பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே தனிப்பட்ட தொடர்புகளை ஊக்குவிப்பதுடன் மாணவ மாணவிகளால் சொந்தமாக மதிப்பீடு செய்தது, ஆசிரியர்களால் வெளியில் இருந்து மதிப்பீடு செய்தது பெற்றோர் பார்வையில் மதிப்பீடு செய்தவைகளை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு வசதிசெய்கின்றது. பெற்றோர் கலந்துரையாடல் சிறந்த திறமைகளை அங்கீகரிப்பதுடன் சாதகமான நடைமுறைகளை பெறுமதியாக்குகின்றது. அதேவேளை, பிரச்சினையான விடயங்களை நேரடியாக கதைத்துக் கொள்வதுடன் ஒன்றுசேர்ந்து தீர்வு காண்பதற்கு வழிவகுக்கின்றது. விசேட நிகழ்வுகள் அல்லது பெற்றோர் விரும்பினால் மேலதிக கலந்துரையாடல்களை பாடசாலை ஒழுங்கு செய்யும்.

### பெற்றோர் கலந்துரையாடலைப் பதிவுசெய்தல்

கதைக்கப்பட்ட விடயங்கள் ஒரு புள்ளடியிடப்படும் வகையில் மற்றும் நிச்சயமாக சிறுவசனங்களில் பதிவாக்கப்படும். பெற்றோருடன் ஒன்றுசேர்ந்து கதைத்தபின் குறைவான வசனங்களில் சுருக்கமாக பதியப்படும். தற்சமயம் ஒன்றுசேர்ந்த கலந்துரையாடலுக்கான தேவை இல்லாதுவிட்டால், பதிவுசெய்ய வேண்டிய இடங்கள் வெறுமையாக விடப்படும். இந்தப் பத்திரங்கள் பதிவுக்கோவையின் ஒரு பகுதியாகும்.

### தனிப்பட்ட திறமைகள் மற்றும் முக்கிய திறமைகளின் பெறுபேறுகள்

தனிப்பட்ட திறமைகள் மற்றும் முக்கிய திறமைகள் பாடங்களுக்கு மேலான திறமைகளாகக் கருதப்படுகின்றன. இவை குறித்த மதிப்பீடுகள் 7., 8., மற்றும் 9ம் பாடசாலை வருடங்களில் பிறிதொரு படிவத்தில் குறித்துக்கொள்ளப்படும். இதன்போது ஆசிரியர்கள் அத்துடன் மாணவிகள் மற்றும் மாணவர்கள் இந்த மதிப்பீட்டை முன்னெடுப்பார்கள்.

### மதிப்பீட்டு அறிக்கை

ஜநசகுயடிநடைவேகைச (Zeugnisse)

மதிப்பீட்டு அறிக்கை மாணவிகள் மற்றும் மாணவர்களுக்கு பல்வேறு பாடங்களில் அவர்களது திறமைகளின் தரம் குறித்து எழுத்துமூலமாக வெளிப்படுத்தும்.

மாணவிகள் மற்றும் மாணவர்கள் ஒரு மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக்கொள்வார்கள்:

ஆரம்பத்தரம்:

– பாடசாலை வருடம் 2.இ 4.இ 5. மற்றும் 6. முடிவில்

மத்தியதரநிலை ஐ:

– பாடசாலை வருடம் 7.இ 8.இ மற்றும் 9. முடிவில்

இவை சராசரியாகக் கணிக்கப்படாமல் ஆசிரியர்களின் தகுதியான கணிப்பீட்டு முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும்.

# பாடசாலை எதிர்காலப்பாதையை முடிவுசெய்தல்

முழு மதிப்பீடுகளையும் வைத்தே பாடசாலை எதிர்காலப்பாதை முடிவுசெய்யப்படும். இதில் பிரதான கேள்வியாக இருப்பது, எந்த வகுப்பில், எந்த பாடசாலை இரகத்தில் அல்லது மட்டத்தில் மாணவிகள், மாணவர்களுக்கு ஊக்கமளிக்க முடியும் என்பதாகும்.

பாடசாலை எதிர்காலப்பாதையை முடிவுசெய்வதென்பது விசேடமாக:
- அடுத்த பாடசாலை வருடத்திற்கு உயர்ந்து செல்வது
- ஒரு பாடசாலை வருடம் கற்காமல் உயர்ந்து செல்வது அல்லது ஒரு பாடசாலை வருடத்தை மீளவும் கற்பது
- ஒரு விசேட வகுப்பிற்கு அனுப்புவது அல்லது ஒரு விசேட வகுப்பில் இருந்து மீளவும் வழமையான வகுப்புக்கு அனுப்புவது
- ஒரு வேறு இரகமான பாடசாலைக்கு அல்லது வேறு பாடத்தரமுள்ள மத்தியதரநிலை 1 க்கு அனுப்பிவைப்பது, தொடர்ந்து இருக்கச் செய்வது அல்லது மாற்றுவது
- கிம்நாசியப் பாடத்திட்டம், வர்த்தகத்துறைப் பாடசாலை, துறைசார் கல்லூரி மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் சேர்வது.

தனிப்பட்ட முறையில் பாடசாலை எதிர்காலப்பாதையை முடிவுசெய்தல்.

தனிப்பட்ட முறையில் பாடசாலை எதிர்காலப்பாதையை முடிவுசெய்தல், கட்டாய பாடசாலைக் காலம் முழுவதிலும் அத்துடன் பாடசாலை வருடம் நடைபெறும் காலத்தில் அடிப்படையாக எந்த வேளையிலும் இயலும். இதற்கான தேவை இருந்தால் மற்றும் இது பலன் கொடுக்கும் என்றால் ஒவ்வொரு மாணவ மாணவிகளுக்கும் இதை செயற்படுத்த முடியும். பாடசாலை வருடக்காலத்தில் ஒவ்வொரு மாணவ மாணவிகளும் உ.ம். ஒரு விசேட வகுப்பிற்கு அல்லது உயர்ந்த அல்லது குறைவான பாடத்தரமுடைய மத்தியதரநிலை 1 க்கு மாறலாம்.

வகுப்பாசிரியரின் விண்ணப்பதற்கு அமைவாக பாடசாலை அதிபர் பாடசாலை எதிர்காலப்பாதையை முடிவுசெய்வதைத் தீர்மானிப்பார். இது மதிப்பீட்டு அறிக்கை வழங்கும்போதோ அல்லது தனிப்பட்ட முறையில் ஒரு பாடசாலை எதிர்காலப்பாதையை முடிவுசெய்யும்போதோ பெற்றோருக்கு எழுத்து மூலமாக அறியத்தரப்படும்.

# ஆரம்பதரநிலையிலிருந்து மத்தியதரநிலை 1 க்கு உயர்ந்து செல்லும் நடைமுறை

ஆரம்பதரநிலை மற்றும் மத்தியதரநிலை 1

- ஆரம்பதரநிலை என்பது 1 தொடக்கம் 6 வரையான பாடசாலை வருடங்களை எடுத்துக்கட்டுகின்றது..
- மத்தியதரநிலை 1 என்பது 7 தொடக்கம் 9 வரையான பாடசாலை வருடங்களை அதாவது அதை எவ்வழியாக அடைந்திருப்பினும் மற்றும் செல்லும் பாடத்தரம் அல்லது பாடசாலை இரகத்தில் தங்கியிருக்காது என்பதை எடுத்துக்காட்டுகிறது. மத்தியதரநிலை 1 ல் மாணவிகள் மற்றும் மாணவர்கள் ஒன்றில் றியால் பாடசாலை-, மத்தியதரப்பாடசாலை- அல்லது விசேட மத்தியதர பாடத்தரமுள்ள வகுப்பிற்கு செல்வார்கள் (இவ்வகையான தரங்களை நகரம் வைத்திருந்தால்). மத்தியதரப்பாடசாலையில் றியால்பாடாசலைக்கு மேலான நிபந்தனைகள் இருக்கும். மத்தியதரநிலை 1 க்கு உயர்ந்து செல்வது வழமையாக 6.வது பாடசாலை வருடத்தின் பின்பு இடம்பெறும்.

உயர்ந்து செல்லும் நடைமுறை

உயர்ந்து செல்லும் நடைமுறையின் நோக்கம் என்னவென்றால், உங்கள் பிள்ளையிடமிருந்து எதிர்பார்க்கப்படும் வளர்சி நிலை காரணமாக எந்தப் பாடசாலை இரகம் மற்றும் எந்தப் பாடத்தரத்திற்கு அனுப்பிவைக்கப்படுகிறதோ, அங்குதான் திறமையாக ஊக்குவிக்கப்பட முடியும் என்பதாகும். இதன்படி உங்கள் பிள்ளையின் வளர்ச்சிநடைமுறை ஒரு நீண்ட காலத்திற்கு கண்காணிக்கப்படுவது மற்றும் பக்கத்துணையாக இருப்பதற்கு, ஏற்கனவே ஐந்தாவது பாடசாலை வருடம் கண்காணிப்பு வருடக் காலமாக கணிக்கப்படுகின்றது. எதிர்பார்க்கப்படும் வளர்சிநிலையைக் கணிப்பதற்கு அடிப்படையாக இருப்பவை:

- பாடங்களான டொச், பிரெஞ்சு மற்றும் கணிதத்திலுள்ள துறைசார் திறைமைகளின் மதிப்பீடு, இதன்போது விசேடமாக 5.வது பாடசாலை வருட மதிப்பீட்டு அறிக்கை மற்றும் உயர்ந்து செல்வதற்கான அறிக்கை தகுதிகளாக கணிக்கப்படுகின்றன்
- அனைத்துப் பாடங்களிலும் உள்ள தனிப்பட்ட திறமைகளின் மதிப்பீடு
- பெற்றோரின் அவதானிப்பு
- மாணவிகளின் அல்லது மாணவர்களின் சொந்தமான கணிப்பீடு.

உயர்ந்து செல்லும் அறிக்கை

வகுப்பில் கற்பிக்கும் ஏனைய ஆசிரியர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட பெறுபேறுகளில் இருந்து வகுப்பாசிரியர் உயர்ந்து செல்லும் அறிக்கையைத் தயார்செய்வார். இந்த அறிக்கை, மாணவிகள் மற்றும் மாணவர்களுக்கு டொச், பிரெஞ்சு மற்றும் கணிதப் பாடங்களில் உள்ள திறமைகளையும், அதேவேளை 6.வது பாடசாலை வருட முதல் தவணையில் அனைத்துப் பாடங்களிலும் உள்ள தனிப்பட்ட திறமைகளையும் விபரமாக எடுத்துக்காட்டும்.

உயர்ந்து செல்வது குறித்த பதிவு

உயர்ந்து செல்வது குறித்த பதிவு மூன்று வித்தியாசமான கருத்துக்களின் அடிப்படையில் அமைந்திருக்கும்:

- ஆசிரியரின் பார்வையிலிருந்து அனுப்பிவைத்தல்
- மாணவிகள்/மாணவர்களின் சொந்த கணிப்பின்படியாக்
- பெற்றோரின் பார்வையிலிருந்து அனுப்பிவைத்தல்

உயர்ந்து செல்வதற்கான கலந்துரையாடல் உயர்ந்து செல்வது குறித்த பதிவுக்கு அடித்தளமாக அமைந்திருக்கும்.

உயர்ந்து செல்வதற்கான கலந்துரையாடல்

6.வது பாடசாலை வருடத்தின் தை மாத முடிவிற்குள்ளாக உயர்ந்து செல்வதற்கான அறிக்கை மற்றும் உயர்ந்து செல்வது குறித்த பதிவை பெற்றோர்கள் தமது அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதற்காகப் பெற்றுக்கொள்வார்கள். அதன்பின்பு பெற்றோர் மற்றும் மாணவிகள் அல்லது மாணவர்கள் வகுப்பாசிரியரினால் உயர்ந்துசெல்வதற்கான கலந்துரையாடலுக்கு அழைக்கப்படுவார்கள். உயர்ந்து செல்வதற்கான கலந்துரையாடலின் நோக்கம், ஒன்றுசேர்ந்து உயர்ந்து செல்வதற்கான விண்ணப்பத்தை தயார்செய்வதாகும். இக் கலந்துரையாடலின் பின்பு வகுப்பாசிரியர் உயர்ந்து செல்வது குறித்த பதிவை மெருகூட்டி அதற்கான விண்ணப்பத்தை பாடசாலை அதிபருக்காகத் தயார்செய்வார்.

மீளாய்வுச் சோதனை

உயர்ந்து செல்வதற்கான விண்ணப்பத்தை ஒன்றுசேர்ந்து தீர்மானிக்க முடியாது போனால், பெற்றோர் தமது பிள்ளையின் உயர்ந்து செல்வதற்கான அறிக்கையுடன் மாநிலத்தின் மீளாய்வுச் சோதனைக்கு விண்ணப்பிக்கலாம். பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் தம்மால் ஒன்று அல்லது இரண்டு பாடங்களில் ஒருமித்த முடிவை எடுக்க முடியாவிட்டாலும், உயர்ந்து செல்வதற்கு அவசியமான மூன்று பாடங்களான கணிதம், டொச் மற்றும் பிரெஞ்சு அனைத்துப் பரீட்சைகளிலும் கட்டாயமாகத் தோற்ற வேண்டும். மீளாய்வுச் சோதனையின் பெறுபேறுகளை வைத்து ஆரம்பத்தரப் பாடசாலை அதிபர் உயர்ந்து செல்வதற்கான முடிவை மேற்கொள்வார். பிறமொழி பேசுபவர்கள், புதிதாக குடியேறிய பிள்ளைகள் அல்லது உடல்நலக் குறைவு காரணமாக நீண்ட நாட்களுக்கு பாடசாலை செல்ல முடியாதவர்கள் அல்லது கற்பதில் சோர்வுற்று உள்ளவர்களுக்கு, விசேட ஒழுங்கு முறைகள் அமுலில் இருக்கும். ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் பரீட்சை ஒழுங்கு மற்றும் மீளாய்வு சோதனை குறித்த மேலதிக தகவல்களை கல்வித்திணைக்களத்தின் இணையத்தளத்தில் காணலாம். (www.erz.be.ch)

உயர்ந்து செல்லும் முடிவு

உயர்ந்து செல்வதற்கான பதிவை வைத்தே பாடசாலை அதிபர் உயர்ந்து செல்வதற்கான முடிவை எடுப்பார். எவர் உயர்ந்து செல்வதற்கு அவசியமான மூன்று பாடங்களில் ஆகக்குறைந்தது இரண்டு பாடங்களில் மத்தியதரப் பாடசாலை- மற்றும் விசேட மத்தியதரத்திற்கு (தற்சமயம் நகரத்தால் இவ்வாறான விசேட மத்தியதர வகுப்பு நடத்தப்பட்டால்) அனுப்பிவைக்கப்பட்டால், மாணவிகள் அல்லது மாணவர்கள் அதற்குத் தகுந்த பாடசாலை இரகங்களுக்குச் செல்வார்கள்.

பேர்ண் மாநிலத்தில் மத்தியதரநிலை 1 க்கு உயர்ந்து செல்வது அடிப்படை ரீதியாக ஒரேமாதிரியாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. பிறமொழி பேசுபவர்கள், புதிதாக குடியேறிய பிள்ளைகள் அல்லது உடல்நலக் குறைவு காரணமாக நீண்ட நாட்களுக்கு பாடசாலை செல்ல முடியாதவர்கள் அல்லது கற்பதில் சோர்வுற்று உள்ளவர்களுக்கு, மதிப்பீடு குறித்த ஒழுங்கு விதிகள் மற்றும் உயர்ந்து செல்லும் நடைமுறைகளில் பாடசாலை அதிபர் விதிவிலக்கு வழங்கலாம்.

மத்தியதரநிலை 1 க்கு உயர்ந்து செல்வதற்கான நிபந்தனைகள்

ஒரு மாணவியோ அல்லது மாணவரோ தமது மதிப்பீட்டு அறிக்கையில் ஆகக்கூடியது மூன்றில் போதிய அளவிலான புள்ளிகளைப் பெறாவிட்டால் அடுத்த பாடசாலை வருடத்தில் மேல் வகுப்பிற்குச் செல்லமுடியாது. டொச், பிரெஞ்சு மற்றும் கணிதத்தில் ஆகக்கூடியது ஒருபாடத்தில் போதிய அளவிலான புள்ளிகள் பெறாமல் இருக்கலாம். இவ்விதமான வகுப்பேற்றத்திற்கான நிபந்தனைகளை பாடசாலை வருட இறுதியில் நிறைவேற்றாவிட்டால், குறைந்த இரகமான பாடசாலைக்கோ அல்லது அதே பாடசாலையில் மீளவும் ஒரு பாடசாலை வருடம் கற்கவேண்டி ஏற்படும்.

ஒரு மாணவியோ அல்லது மாணவரோ அடுத்து மேலுள்ள பாடசாலை இரகத்திற்கு மாறுவதற்காக போதிய அளவில் தகுதியைக் கொண்டிருந்தால், அதற்கு மாறுவதற்கான அனுமதி காரணங்கள் காட்டப்பட்டு வழங்கப்படும்.

றியால் பாடசாலை மாணவிகள் மற்றும் -மாணவர்கள்

றியால் பாடசாலை இரக மாணவிகள் மற்றும் மாணவர்கள் காரணம் காட்டப்பட்ட உள்நுழைவுக்கு தகுதிபெற்றால், மற்றும் அவர்கள் தேவைப்படுபவைகளை உயர்வான முறையிலும் போதுமான அளவிலும் கொண்டிருந்தால், மத்தியதரப் பாடசாலை இரக 7. வது பாடசாலை வருடத்தை, மீளக் கற்பதற்கு அனுமதிக்கப்படலாம்.

றியால் பாடசாலை இரக மாணவிகள் மற்றும் மாணவர்கள் பாடசாலை வருட இறுதியில் மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிட்டுள்ள பெரும்பான்மையான பாடங்களில் போதுமான புள்ளிகளைப் பெறாவிட்டால், அந்தப் பாடசாலை வருடம் மீளக் கற்கப்பட வேண்டி ஏற்படலாம்.

மத்தியதரநிலை 1 இன் தொடர்ந்து கற்கும் பாடசாலைக்கு உயர்ந்து செல்லுதல்

ஒரு மாணவி மற்றும் மாணவர் கிம்நாசியத்திற்கோ அல்லது வேறு தொடர்ந்து கற்கும் பாடசாலைக்கோ செல்ல விரும்பினால், பாடசாலை எதிர்காலப்பாதையை முடிவுசெய்வது 8 இல்லாவிட்டால் 9 வது பாடசாலை வருட நடுப்பகுதியில் இடம்பெறும். பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களிடமிருந்து இவ்வாறான நடைமுறை குறித்து பெற்றோருக்கு போதியளவு காலத்திற்கு முன்பாக அறியத்தரப்படும்.

# இணைப்பு 1: மதிப்பெண்கள் பின்வரும் அர்த்தம் உடையவை

| மதிப்பெண் | பாடத்தைக் கற்கும் குறிக்கோளை அடைதல் | வீட்டுப்பாடத்தைத் தீர்த்துவிடல் | க்கு அமைவாக உயர் தராதரத்தை அடைதல் |
|---|---|---|---|
| 6<br>மிகவும் சிறந்தது | குறிப்பிட்ட மிகப் பெறுமதியான கற்கும் குறிக்கோளை அதிக நம்பிக்கையான திறமைப் பகுதிகளில் அடைந்துள்ளார். | மிகச் சிக்கலான கேள்விகளுக்கு விடையளிக்கும்போது வெற்றிகரமாக தீர்வுகண்டுள்ளார். | குறிப்பிட்ட காலத்தில் எதிர்பார்க்கப்பட்ட[1] தகுதிப்படிகளை மற்றும் மேலதிகமாக ஒவ்வொன்றிலும் அடைந்துள்ளார். |
| 5<br>சிறந்தது | கற்கும் குறிக்கோளை அனைத்துத் பகுதிகளிலும் மற்றும் பகுதியாகவும் அடைந்துள்ளார்- | ஏசரஉாளஎடடநசந டுநசணைநைடந மிகச் சிக்கலான கேள்விகளுக்கு விடையளிக்கும்போது பகுதிரீதியாக வெற்றியுடன் தீர்வுகண்டுள்ளார். | குறிப்பிட்ட காலத்தில் எதிர்பார்க்கப்பட்ட[1] தகுதிப்படிகளை பலவற்றில் அடைந்துள்ளார். |
| 4<br>போதுமானது | அடிப்படையான கற்கும் குறிக்கோளை அதிகமான திறமைப் பகுதிகளில் அடைந்துள்ளார். | கேள்விகளுக்கு விடையளிக்கும்போது அடிப்படை ரீதியாக போதுமான அளவில் தீர்வுகண்டுள்ளார். | குறிப்பிட்ட காலத்தில் எதிர்பார்க்கப்பட்ட[1] தகுதிப்படிகளை அதிகமானவற்றில் அடைந்துள்ளார். |
| 3<br>போதாது | அடிப்படையான கற்கும் குறிக்கோளை பல திறமைப்பகுதிகளில் பெறவில்லை. | கேள்விகளுக்கு விடையளிக்கும்போது அடிப்படை ரீதியாக போதுமான அளவில் தீர்வுகாணவில்லை. | குறிப்பிட்ட காலத்தில் எதிர்பார்க்கப்பட்ட[1] தகுதிப்படிகளை போதிய அளவில் அடையவில்லை. |
| 2<br>குறைவானது | அடிப்படையான கற்கும் குறிக்கோளை அதிக திறமைப்பகுதிகளில் பெறவில்லை. | கேள்விகளுக்கு விடையளிக்கும்போது அடிப்படை ரீதியாக போதுமான அளவில் எந்தத் தீர்வையும் காணவில்லை. | குறிப்பிட்ட காலத்தில் எதிர்பார்க்கப்பட்ட[1] தகுதிப்படிகளை அதிகமானவற்றில் அடையவில்லை |
| 1<br>மிகக் குறைவானது | அடிப்படையான கற்கும் குறிக்கோளை அனைத்துத் திறமைப்பகுதிகளிலும் பெறவில்லை. | அடிப்படை ரீதியாக எந்தக் கேள்விகளுக்கும் சரியான விடையளிக்கவில்லை | குறிப்பிட்ட காலத்தில் எதிர்பார்க்கப்பட்ட[1] தகுதிப்படிகளை எதிலும் அடையவில்லை |

[1] 2வது மற்றும் 6 வது ஆரம்பப் பாடசாலை வருட இறுதியில் மற்றும் மத்திய தரநிலை 1 ன் இறுதியில் அடிப்படைத் தகுதி அமுலில் இருக்கும்.

# இணைப்பு 2: தரங்களின்படியான மதிப்பீட்டு வடிவம

படிவத்தைப் பார்வையிட: ww.erz.be.ch/beurteilung → Downloads

| பாடசாலை வருடம் | | பாடசாலை வருடத்தின் ஆரம்பம் | பாடசாலை வருடத்தின் நடுப்பகுதி | பாடசாலை வருடத்தின் முடிவு | | |
|---|---|---|---|---|---|---|
| முபு 1 | சுழற்சி 1 பாலர் பாடசாலை/ஆரம்பத்தரம் | பெற்றோர் கலந்துரையாடல்* | | | | ஆட்சேபனை கூறக்கூடிய தனிப்பட்ட பாடசாலை எதிர்காலப் பாதையை முடிவுசெய்வது , முழுமையான கட்டாய பாடசாலைக்காலத்தில் எந்த வேளையிலும் இயலும். |
| முபு 2 | | பெற்றோர் கலந்துரையாடல்* | | | | |
| 1. | | பெற்றோர் கலந்துரையாடல்* | | | | |
| 2. | | பெற்றோர் கலந்துரையாடல்* | | மதிப்பீட்டு அறிக்கை புள்ளிகள் இல்லாது | | |
| 3. | சுழற்சி 2 ஆரம்பத்தரம் | பெற்றோர் கலந்துரையாடல்* | | | | |
| 4. | | பெற்றோர் கலந்துரையாடல்* | | மதிப்பீட்டு அறிக்கை புள்ளிகளுடன் | | |
| 5. | | பெற்றோர் கலந்துரையாடல்* | | மதிப்பீட்டு அறிக்கை புள்ளிகளுடன் | | |
| 6. | | | உயர்ந்து செல்வதற்கான கலந்துரையாடல் ** ஆரம்பத்தரம் மத்தியதரம் 1 உயர்ந்து செல்வதற்கான அறிக்கை /-பதிவு தேவைப்படின் மீள் பரீட்சை | மதிப்பீட்டு அறிக்கை புள்ளிகளுடன் | | |
| 7. | சுழற்சி 3 மத்தியதர நிலை 1 | பெற்றோர் கலந்துரையாடல்* | | மதிப்பீட்டு அறிக்கை புள்ளிகளுடன் | மதிப்பீட்டுக் கோவை தனிப்பட்ட திறமைகள் மற்றும் முக்கிய-திறமைகள் | |
| 8. | | பெற்றோர் கலந்துரையாடல்* | உயர்ந்து செல்லும் முடிவு: கிம்நாசியம் அல்லது மத்திய தொழில் பாடசாலை | மதிப்பீட்டு அறிக்கை புள்ளிகளுடன் | | |
| 9. | | பெற்றோர் கலந்துரையாடல்* | உயர்ந்து செல்லும் முடிவு: கிம்நாசியம் அல்லது மத்திய தொழில் பாடசாலை | மதிப்பீட்டு அறிக்கை புள்ளிகளுடன் கட்டாய பாடசாலை நிறைவு | | |

* பாடசாலையில் பெற்றோர் கலந்துரையாடலுக்கான நேரத்தை விரும்பியவாறு தெரிவுசெய்யலாம். பெற்றோருக்க முன்கூட்டியே நேரம் அறிவிக்கப்படும்.

** ஆரம்பப்பாடசாலை 6வது பாடசாலை வருடத்தில் உயர்ந்து செல்வதற்கான கலந்துரையாடல் மாசிமாத நடுப்பகுதிக்கு முன்பாக இடம்பெறும்..